in so many respects. I am confident that if an industrial estate is started in Hosur, it will work properly. May I know from the Hon. Minister when he is going to start an industrial estate at Hosur?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றி இப்படிப்பட்ட வாதங்கள் கிளப்பப்படும் என்றுதான் நம்முடைய அரசு புதிய கொள்கையை வகுத்திருக்கிறது. நாம் நிலத்தை வாங்கிக்கட்டிக் கொண்டு பின்னாலே வருவார்களா, வரமாட்டார்களா என்று பரிசோதிப்பதைவிட யார் யார் முன் வருகிறார்களோ அவர்களுக்கு ஹயர் பர்சேஸ் என்ற முறையில் கொடுக்கலாம் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் ஹோசூரில் எத்தனைபேர்கள் இன்டஸ்டிரியல் எஸ்டேட் வேண்டுமென்று கேட்கிறார்கள் என்று தகவல் கொடுத்தால் அதைக் கட்டிக்கொடுக்கத் தயாராகயிருக்கிறோம்.

திரு. பெ. மலேச்சாமி : தலைவரவர்களே, தமிழகத்தில் சில பகுதிகளுக்குச் சலுகையளிக்க அரசாங்கம் முன் வந்திருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட சலுகை புதிதாகத் தொடங்கும் தொழிற்சாலைகளுக்கு மட்டும்தானா, அல்லது ஏற்கனவே நடந்து கொண்டு வருகின்ற பழைய தொழிற்சாலைகளுக்கும் இந்தச் சலுகைகள் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநில அரசும், மத்திய அரசும் பல சலுகைகள் தருகின்றன. சில சலுகைகள் புதிதாகத் தொடங்கப்படும் தொழிற்சாலைகளுக்கும், இருக்கின்ற தொழிற்சாலையை விஸ்தரிக்கும் பொழுது எக்ஸ்பான்ஷன் ஸ்கீம் என்ற வகையில் அவைகளுக்கும் இது பொருந்தும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, இப்பொழுது சென்னையில் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளுக்கு கட்டிடம் கொடுக்காமல் இடத்தை மட்டும் தருவதாகச் சொல்லப்படுகிறது. ஏன் அங்கெல்லாம் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படவில்லை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இரண்டு திட்டமும் இருக்கிறது. அரசாங்கம் கட்டிடம் கட்டிக் கொடுத்து கிண்டியில் அம்பத்தூரில் வந்திருக்கிறது. டெவலப்ட்பிளாட்ஸ் என்ற முறையில் நாமே வாங்கிக்கொடுத்து அவர்கள் விருப்பம்போல் கட்டிக்கொள்ள அங்கீகாரம் கொடுக்கிறோம், அதற்குரிய பண உதவியும் செய்கிறோம்.

Paper Factory in Denkanikotta.

* 74 Q.—Thiru B. VENKATASAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to start a paper factory at Denkanikotta in Dharmapuri district; and

(b) if so, when it will be started?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

1971 ஜூன் 28]

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Industries the quantity of bamboo sent to Seshasayee Mills which is producing paper from Denkanikotta forest?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மின்சாரத்துறை அமைச்சரிடத்தில் கேட்டால் காட்டிலாக்காவிலிருந்து அந்தப் புள்ளி விரங்களைச் சேகரித்துக் கொடுப்பார்கள்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இப்பொழுது நம்முடைய தமிழகத்திலிருக்கும் சர்க்கரை ஆலைகளிலே அந்த சர்க்கரையானது பகாஸ் என்று சொல்லப்படுவது அதிகமாக வீணாகிறது. அவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து அந்த இடத்திலே ஒரு காகித ஆலை ஆரம்பிக்கும் எண்ணம் உண்டா? அதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வடார்க்காடு மாவட்டத்திலே ஒரு தனி நபர் இதுபோன்ற முயற்சியில் ஈடுபட முன்வந்திருக்கிறார். அவர்களுக்குத் தேவையான ஆதரவு தருவதாக அரசு கூறியிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், பேப்பர் ஃபேக்டரி ஆரம்பிப்பதற்குத் தமிழக அரசே லைசென்ஸ் கொடுக்க முடியுமா? அல்லது இதற்கும் மத்திய அரசைத்தான் எதிர்பார்க்க வேண்டுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புதிதாக வந்திருக்கிற உத்தரவுப்படி இதற்கும் லைசென்ஸ் வாங்க வேண்டும்போல் தோன்றுகிறது. ஆனால், இந்தப் பேப்பர் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்காரே ஏராளமாகத் தொடங்க வேண்டுமென்று அதற்காக கார்ப்பரேஷன் அமைக்க முன்வந்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலுள்ள வசதி வாய்ப்புகளை ஆராயச் சொன்னார்கள். நாம் அதைப்பற்றி காட்டிலாக்கா அதிகாரிகள், தொழிலதிபர்கள் இடையே கருத்தரங்கு அமைத்து முடிவெடுக்கப்பட்டது. குறைந்தபட்சம் ஒரு இலட்சம் எக்கராவில் வேட்டில், மூங்கில் மரங்கள் உற்பத்தி செய்யும் வாய்ப்பிருந்தால்தான் புதிய தொழிற்சாலைக்கு வாய்ப்பிருக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, பேப்பர் தொழிற்சாலைக்குத் தேவையான பேம்பு போன்ற மூலப்பொருட்கள் ஏராளமாக இருந்தால் அவை கிடைக்கும் இடங்களில் பேப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றித்தான் இப்பொழுது சொன்னேன். ஒரு இலட்சம் எக்கராவில் புதிதாக உற்பத்தி செய்யும் வாய்ப்பிருந்தால்தான் இப்போதைக்குப் புதிய தொழிற்சாலை ஏற்பட வாய்ப்பிருக்கும்.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி, வருஷநாடு பகுதிகளில் மரங்கள் பயிரிடப்படுவதால் பேப்பர் தொழிற்சாலை ஒன்றை அங்கே அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : வருஷ நாட்டு நிலங்களை இப்பொழுது சொந்தமாக்கப் போராட்டம் நடந்து வருகிறது. அதைப்பற்றித்தான் அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

திரு. ஜே ஜேம்ஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் டயர், டியூப் போன்ற இரப்பர் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருளான இரப்பர் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கே இரப்பர் பேக்டரி அமைக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு செ. மாதவன் : இது பேப்பர் தொழிற்சாலையைப்பற்றிய வினா. அந்தப் பகுதியிலே யாராவது அதுபோன்ற முயற்சியெடுக்க முன்வந்தால் அரசாங்கம் சேர்ந்து ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த பேப்பர் தொழிற்சாலைக்கு யாருக்காவது உரிமம் வழங்கப்பட்டு திரும்பப் பெற்றிருக்கிறதா, அப்படியானால் விவரம் என்னவென்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரங்கள் இப்பொழுது என்னிடத்தில் இல்லை.

திரு. எம் தேவராசன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் ஏராளமாக மூங்கில் கிடைக்கிறது. அங்கே பேப்பர் தொழிற்சாலை அமைக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதைக்கு இல்லை.

கோவை மாவட்டத்தில் சிமிட்டித் தொழிற்சாலை

***75. வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மாவட்டம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை தாலுக்காக்களில் சிமிட்டித் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகளை ஆராயும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், டால்மியாபுரத்தில் அரசாங்கம் ஆரம்பித்த பைலட் ப்ராஜக்ட்டில் லாபமா அல்லது நஷ்டமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பைலட் ப்ராஜக்ட் என்று அவர்களே கேட்டு விட்டதால் லாப நஷ்டம் என்று அதிலே இருக்காது. புதிய முறை ஆராய்ச்சி செய்யப்பட்டது.